<u>முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>

<u>O.S. No. 123/2021</u>

**<u>Witness PW 1</u>**

பெயர் பூபதி த/பெ கண்ணையன்

இன்று (10.12.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியமாக சொல்கிறேன்</u>**

என்ன தேதியில் வீட்டை காலி செய்து கொடுத்தார்கள் என்றால் 25.08.2018 தேதியில் காலி செய்து கொடுத்தார். இந்த தேதியை நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நாளது தேதி வரையில் பிரதிவாதிகள் தான் வீட்டில் இருந்து வருகிறார்கள் அதனால்தான் வீட்டை காலி செய்த தேதி என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல . எந்த தேதியில் கிரையம் ஏற்பட்டது என்றால் 23.05.2018 தேதியில் ஏற்பட்டது. கிரைய தேதி அன்று நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அன்றைய தினம் ரூ. 1,00,000/- கொடுத்தேன். ஏற்கனவே நான் எவ்வளவு பணம் கொடுத்துள்ளேன் என்றால் ரூ . 2,58,450/- கொடுத்துள்ளேன். கடனுக்காக தான் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான் சாட்சி பின்னிட்டு அவர் வாங்கிய கடனை கட்டி முடித்து எனக்கு இடத்தை பதிவு செய்து கொடுத்தார் . கடனுக்கு அடமான பத்திரம் தான் எழுதிக்கொடுத்தார் அவரது குடிப்பழக்கத்தை சாதகமாக கொண்டு நான் ஏமாற்றி கிரைய பத்திரமாக எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல . எங்கள் ஊரை சேர்ந்த குருமூர்த்தி என்பவரது சொத்தை இதே போல்தான் ஏமாற்றி கிரையம் எழுதி மீண்டும் நான் திரும்பி கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல . குருமூர்த்தி எனக்கு அறிவிப்பு

அனுப்பினாரா என்றால் அறிவிப்பு அனுப்பினார் அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனது மனைவிக்கும் அறிவிப்பு வந்ததா என்றால் அறிவிப்பு வந்தது . 1ம் பிரதிவாதியின் கணவர் ஆதிமூலம் என்பவரிடம் அவருடைய இருசக்கர வாகனம் , மற்றும் Ashok Leyland Load வண்டி வாங்கி கொண்டு அந்த கிரைய தொகையை அசலில் கழித்து கொண்டதாக சொன்னேனா என்றால் சரியல்ல . தற்போது பிரதிவாதியை கடன் தொகையை திருப்பி செலுத்த தயாராக உள்ளார் என்றால் எனக்கு பதிவு கிரையம் தான் கொடுக்கப்பட்டது அதை திருப்பி தர முடியாது . கிரய பத்திரத்தில் எங்கள் ஊரை சேர்ந்த பாண்டியன் மற்றும் சந்திரசேகர் ஆகியோர்கள் சாட்சியாக கையெழுத்து இட்டுள்ளார்கள் என்றால் சரிதான் . பாண்டியன் என்பவரை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. பாண்டியன் என்பவர் கடனை பெற்றுக்கொண்டு பதிவு கிரயத்தை ரத்து செய்து கொடுக்குமாறு என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல . அவரை சாட்சியாக விசாரித்தார் கடனுக்காகதான் பத்திரம் எழுதப்பட்டது என்று தெரிய வந்துவிடும் என்பதால் அவரை சாட்சி யாக விசாரிக்க வேண்டாம் என்று சொல்வது என்றால் சரியல்ல . கடைசியாக எப்போது வாடகை பெற்றதாக சொல்கிறேன் என்றால் 2018 ம் வருடம் 8 வது மாதம் தான் கொடுத்தார்கள். எந்த காலத்திலும் எனக்கு வாடகை கொடுக்கவில்லை வட்டியாக தான் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல அதனால் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(Sd/-A.Tamilselvan)
Principal Subordinate Judge,
Villupuram